## தலைப்பு 166 – நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 24 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கடப்பாடுகள் பதிவேடு | | |
| அமைச்சின் உயர் கல்விப் பிரிவினால் உடன்பட்டிருந்த கடப்பாடுகள் தொடர்பாக குறிப்பிடுவதற்கான கடப்பாடுகள் பதிவேடொன்று பேணப்படாமையுடன் இதன் காரணமாக அந்தந்த கடப்பாடுகளுக்கு உடன்பட்ட திகதி மற்றும் அக்கடப்பாடு முடிவுறும் திகதி என்பவற்றை திட்டமாக உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | கடப்பாடுகளுக்கு உடன்பட்ட திகதி மற்றும் அக்கடப்பாடுகள் முடிவுறும் திகதி என்பவற்றை திட்டமாகக் காட்டக்கூடிய வகையில் உடன்பட்டிருந்த கடப்பாடுகள் தொடர்பாக கடப்பாடுகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டியமை. | கடப்பாடுகள் பதிவேடொன்றும் பேணுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |

(ஆ) பிணைப் பதிவேடு

| | | |
|---|---|---|
| நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் பிரிவினால் நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களினது தகவல்கள் உள்ளடங்கியதாக பிணைப் பதிவேடொன்று பேணப்படவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்டவாறு தகவல்கள் உள்ளடங்கியதாக பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டியமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களின் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கியதாகப் பதிவேடொன்றைத் தயாரித்துப் பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. |

**1.6.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பி.க.உ பின்வரும் விடயங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல்கள் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் நிதிக் கட்டுப்பாடுகளிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றைத் தயாரித்துப் பேணப்பட வேண்டுமெனப் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாகக் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறன் உள்ளதாகப் பேணப்பட்டு வருவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு அம்மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(இ) பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காகச் செயற்திறனாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று பேணப்பட்டு வருகின்றதா என்பதனை காலாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் மீளாய்வு செய்வதற்கு அது சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் அறிக்கையிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அவ்வாறான மீளாய்வு ஒன்று செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச்சமர்ப்பிக் கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வு சரியான முறையில் செயற்படுகின்றமைக்காக செயற்திறனான முறைமைகள் காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியுள்ள போதிலும் அத்தேவைப்பாடு நிறைவேற்றப்படவில்லை. | - மேற்படி - | சரியான நேரத்தில் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்திற்கு அறிக்கையிடுவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவை முறையாக பராமரிக்குமாறு உரிய பிரிவுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 170(2)(அ) | நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் பிரிவிற்காக வெள்ள நிவாரணத்திற்காக வருடத்தின் போது 2017 ஆம் வருடத்தில் வேறு நிறுவனங்களிடமிருந்து கிடைத்த ரூபா 10 மில்லியன் ஆன நன்கொடைகள் அரச வருமானத்தில் செலவு வைக்கப்படாமல் வைப்புக் கணக்கில் தக்க வைக்கப்பட்டிருந்ததுடன் அத்தொகையில் வெள்ள நிவாரணமல்லாத வேறு நடவடிக்கைகளுக்காக 2017 தொடக்கம் 2019 வரையான மூன்று வருடங்களுக்கு முறையே ரூபா 1,000,678, ரூபா 1,494,865 மற்றும் ரூபா 712,057 என்பன செலவிடப்பட்டிருந்தன. | நிதிப்பிரமாணம் 170(2)(அ) இன் பிரகாரம் இத் தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியமை. | உடன்படுகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந்திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | உயர் கல்விப் பிரிவிற்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டின் போது கண்டுபிடிக்கப்பட்ட 74 வகையான பொருட்களுக்கான குறைபாடு மற்றும் 35 வகைப் பொருட்களுக்கான மிகை தொடர்பாக சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் பிரிவிற்கான 2019 ஆம் வருடத்திற்கான வருடாந்த பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2020 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்கீட்டுப் பொருட்கள் பாதுகாப்பு மற்றும் ஆயுட்காலம் என்பவற்றை உறுதிப்படுத்தும் வகையில் வருடாந்தம் பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப் பட்ட குறைபாடுகள் மற்றும் மிகை தொடர்பாகச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் படி செயற்பட வேண்டியமை. | இனங்காணப்பட்ட மிகைகள் மற்றும் குறைபாடுகள் ஏற்பட்டமைக்கான காரணங்கள் மற்றும் அவற்றை சரி செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளன. |
| (இ) | 2017 யூன் 28 ஆந் திகதிய 2017/01 ஆம் இலக்க நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் பிரிவிற்கு உரித்தான அனைத்துச் சொத்துக்கள் சம்பந்தமான விபரங்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் கொம்ப்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டிய போதிலும் அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாகச் செயற்படுத்தப்பட வேண்டியமை. | உடன்படுகின்றேன். |
| (ஈ) | 2019 செப்டம்பர் 24 ஆந் திகதிய 05/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவு | 2019 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமையல்லாத செயற்திட்டங்கள், இதுவரை ஆரம்பிக்கப்படாத வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் அத்தியாவசிய மற்றும் தளபாடம், அலுவலக உபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்தல் தொடர்பாக இனங்கண்டு அவற்றை அடுத்த | சுற்றறிக்கையின்அறி வுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மக்களது தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை வளரப்பதற்கு இன்றியமையாத இத்திட்டங்களைச் செயற்படுத்தப்பட வேண்டி இருந்ததுடன் குறிப்பாக கஷ்டப் பிரதேசங்களில் காணப்பட்ட |

| | | |
|---|---|---|
| | வருடத்திற்குப் பிற்போடுவதற்கான கவனம் எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 10 செயற்திட்டங்களுக்காக 2019 செப்டம்பர் மாதத்திற்குப் பின்னர் நகரத் திட்டமிடல் பிரிவினால் ரூபா 19.9 மில்லியன் பெறுமதியான செயற்திட்டத்திற்காக உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | பாழடைந்த உட்தெருக்கள் சிலவற்றுக்கு முன்னுரிமை அளித்து அத்திட்டங்களுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டன. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கங்கள் ஏற்படுத்தப்பட்ட 13 செலவு விடயங்களுக்கான ரூபா 1,485 மில்லியன் ஒதுக்கங்களில் எத்தொகையும் பயன்படுத்தப்படவில்லை. | நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒதுக்கங்கள் உச்ச அளவில் பயன்படுத்தப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பல்வேறுபட்ட காரணங்களினால் மீளாய்வாண்டிற்குள் இம்முழு ஒதுக்கங்களும் சேமிக்கப்பட்டமை தவிர்க்க முடியாத ஒன்றாகும். |
| (ஆ) | அமைச்சின் கீழான குளியாப்பிட்டிய பேராசிரியர் பிரிவின் நிர்மாண வேலைத் திட்டத்திற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்ட ரூபா 150 மில்லியன் ஆனது முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | திட்டவட்டமான நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ரூபா 150 மில்லியன் ஆன குளியாப்பிட்டிய பேராசிரியர் சுகாதார அமைச்சிற்கு கையளிக்கப்பட்டமை காரணமாக இவ்வொதுக்கம் சேமிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | 32 செலவு விடயங்களுக்கான தேறிய ஒதுக்கம் ரூபா 5,445 மில்லியனில் நூற்றுக்கு 33 தொடக்கம் நூற்றுக்கு 99 வீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் காணப்பட்டன. | ஒதுக்கங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கட்டுநிதி கிடைக்காமை, மாணவர் கடன் திட்டத்தில் போதுமானளவு பிள்ளைகள் எண்ணிக்கை கலந்து கொள்ளாமை, நிர்மாண வேலைகள் இடையில் |

| | | |
|---|---|---|
| | | இடைநிறுத்தப்பட்டமை ஒப்பந்தங்களுக்கான அனுமதி பெறப்பட்டதிலேற்பட்ட தாமதம், குறிப்பிட்ட ஒப்பந்த காரர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்காமை, செலவுகளை முகாமைத்துவம் செய்யக் கூடியதாக இருந்தமை மற்றும் பராமரிப்புச் செலவுகள் குறைவடைந்தமை போன்ற காரணங்களால் இந்த ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஏப்ரல் 21 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 94 இற்கு முரணாக வருட இறுதியில் 12 செலவு விடயங்களுக்கான பொறுப்புக்களுக்கு உரிய சேமிப்புக்கள் சீராக்கப்பட்ட பின்னர் தேறிய ஒதுக்கங்களை விஞ்சியதாக மொத்தம் ரூபா 10.9 மில்லியனுக்குமான பொறுப்புக்களுக்கு கடப்பாடு காணப்பட்டது. | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கியதாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ரூபா 8.6 மில்லியனுக்கான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டமை காரணமாக மற்றும் பிற்போடப்பட முடியாத ரூபா 2.3 மில்லியன் பொறுப்புக்களுக்கான செலவுகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டமை. |
| (ஆ) 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பிரிவு இல (iii) இன் | அனைத்து பொறுப்புக்களும் வெளிக் காட்டப்பட வேண்டியமை. | இக்கடன் தொகைக்காக வட்டி சராசரி எடையுள்ள விதத்தில் அளவு குறிப்பிடப்படவில்லை என்பதால் செலுத்த |

| | | |
|---|---|---|
| பிரகாரம் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனம் அபிவிருத்தி செய்தல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களுக்காக இரு தனிப்பட்ட வங்கிகளிடமிருந்து பெறப்பட்டிருந்த கடன் தொகைக்காக 2020 ஆம் வருடத்தில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 344.9 மில்லியன் வட்டிப் பணமானது பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் வெளிக்காட்டப்படவில்லை. | | வேண்டிய கடன் தவணையின் மூலதனப் பகுதி மட்டும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் வெளிக்காட்டப் பட்டிருந்தது. |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 262/2017 இன் பிரகாரம் ஓய்வூதியம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் கடன் மீதி சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படாமையுடன் 2 வருடங்களுக்கும் மேலாக ரூபா 83,920 ஆன ஓய்வூதியம் பெற்றுச் சென்ற ஒருவரின் கடன் மீதியொன்று காணப்பட்டது. | குறித்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிலுவைக் கடன் மிகுதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஓய்வூதியப் பணிக்கொடையில் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) கடன் மீதிகளை நீக்குதல் சம்பந்தமாக 2017 மார்ச் 13 ஆந் திகதிய PF/RED/2015/அஉ_முபீ/05 ஆம் இலக்க அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் மேலும் எடுக்கப்பட வேண்டிய | சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பிரகாரம் கடன் மிகுதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வீட்டுக்கடன் அறவிடுதல் சம்பந்தமாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதுடன் சேவையிலிருந்து நீக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன்களை நீக்குதல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகள் காட்டப்பட்டிருந்த போதிலும் 2006 ஆம் வருடத்தில் மற்றும் 2015 ஆம் வருடத்தில் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்த இரு உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தம் ரூபா 231,450 ஆனது மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படாது காணப்பட்டது. | | |

## 2.4 செலவு மீதிகள்

--------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 காலப்பகுதியினுள் உயர்கல்வி நிறுவன மீளாய்வு தொடர்பாக அரச சார்பற்ற 51 உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா 24,073,406 ஆன வைப்புப் பணம் மீளாய்வாண்டின் இறுதிவரையில் குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை. | பட்டங்களை வழங்கும் நிறுவனங்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் மீளாய்வு பணிகளை தாமதமின்றி முடிப்பதுடன் வைப்புப் பணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படல் வேண்டும். | மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிக காலம் எடுக்குமென்பதால் பணிகள் முடிவடையும் வரை பொது வைப்புக் கணக்கில் தக்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தற்போது பணிகள் நிறைவடைந்த நிறுவனங்களுக்கான வைப்புக்கள் அரச வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர் கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரை 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த 2 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் 02 வருடங்களுக்கு மேற்பட்ட தக்க வைக்கப்பட்ட பணம் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியமை. | 2 வருடங்களைத் தாண்டிய வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 5.5 மில்லியன் ஆன வைப்பு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கையின்றி மீளாய்வாண்டின் இறுதி வரையில் பொது வைப்புக் கணக்கில் தக்க வைக்கப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்கம் மற்றும் பணிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய PPD/RED/01/04/2014/01 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் தகவல்களுக்கு இணங்கியதாக அமைச்சிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் அனைத்து அறிக்கைகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.2 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை அடைவதற்கு ஒவ்வொரு குறிக்கோள்களுக்கும் செயற்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் தொடங்கப்படுவதற்கு முன்னர் அத்திட்டம் அங்கீகரிக்கப்படல் வேண்டும். எனினும், 2019 | செயல் நடவடிக்கைத் திட்டம் வருடம் தொடங்கப்படுவதற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்படல் வேண்டும். | 2019 வருடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்த போது மாதிரிப் படிவத்தில் மாற்றங்கள் ஏற்பட்டமையால் குறிக்கோள்கள் உள்ளடக்கபடாமையுடன் அந்த குறிக்கோள்களை உள்ளடக்கிய பின்னர் திட்டத்தை தயாரித்து சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 30 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு அடையக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் இனங்காணப் பட்டிராமையுடன் அக்குறிக்கோள்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் 2020 யூன் மாதம் வரையில் தாமதித்தே தயாரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2021/2022 ஆண்டுகளில் முடிக்கப்பட வேண்டிய செயற்பாடுகளின் குறிக்கோள் 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த வருடத்திற்குள் நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகள் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | காலத்தை நீடிப்பதன் பொருட்டு பாதீட்டை ஒதுக்கிக் கொள்ளாமையின் காரணமாக அடுத்த வருடத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அதை உள்ளடக்காது இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 3.3 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018/2019 ஆம் வருடங்களில் பாதீட்டு முன்மொழிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 27,348 மில்லியன் ஆன 06 செயற்திட்டங்களுக்கு ஆரம்ப ஒதுக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை. | வருடாந்தப் பாதீட்டு முன்மொழிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட தொகை வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு காலதாமதமின்றி செயற்திட்டங்களை முடிப்பதற்கான | 2018 ஆம் ஆண்டில் அமைச்சின் விடயப் பரப்பு மாற்றப்பட்டமையால் பெறுகை நடவடிக்கைகள் தாமதமடைந்த காரணங்கள், குறித்த காணிகள் தீர்க்கப்பட வேண்டிய காரணத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர் தேர்ந்தெடுக்கப்பட்டமை, கடன் ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டமை போன்ற நடவடிக்கைகளில் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட செயற்திட்டங்கள் அவற்றின் இலக்குகளை அடைந்து கொள்ள முடியாமல் போனது. | நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டியமை. | ஒப்பந்தம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதங்கள் போன்றவை செயற்திட்டங்கள் தாமதமடைவதற்கான காரணங்களாக இருந்தன. |
| (ஆ) | அமைச்சின் 2019 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகமாக மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் பதுளை ஹம்தும்முல்ல நீர்வழங்கல் உத்தேசத் திட்டம் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டிற்குள் ரூபா 160 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்குள் அதில் ரூபா 3.6 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | திட்டமிட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தற்போது திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன. தேசியக் கட்டிட ஆராய்ச்சிகள் நிறுவனத்தின் தீர்மானத்தின் படி திட்டம் மாற்றப்பட்டு மீண்டும் கவனமெடுக்கப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் தொடங்கப்படுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டங்களை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் மேற்பார்வையின் கீழ் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபை மூலம் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்ற 14 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அடையப்பட வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட பௌதீக முன்னேற்றத்தில் நூற்றுக்கு 22 தொடக்கம் நூற்றுக்கு 100 சதவீதத்திற்கிடையிலான வீச்சில் காணப்பட்டமையுடன் அடையப்பட்டிருந்த பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 10 தொடக்கம் நூற்றுக்கு 86 வீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விசல் மாத்தளை நீர் திட்டமிடல் செயற்திட்டத்திற்காகத் தேவையான நீர்க்குழாய் மற்றும் உதிரிப்பாகங்களை விடுவிப்பதற்கான கால தாமதம் காரணமாக பற்றுச்சீட்டுக்களுக்காகக்குறிப்பிட்ட தினத்தில் பணம் செலுத்தப்படாத காரணத்தினால் ஒப்பந்தக்காரர் வேலையை தாமதமாக்கியமை. |
| (ஆ) அமைச்சினால் நேரடியாகச் செயற்படுத்தப்பட்ட மற்றும் மீளாய்வாண்டிற்குள் முடிக்கப்பட வேண்டியதாகக் காணப்பட்ட நாட்பட்ட சிறுநீரக நோய் தடுப்புச் செயற்திட்டம், நகர நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகளை மேம்படுத்தல் செயற்திட்டம், சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பான தெற்காசிய மாநாடு, மழை நீர் தாங்கி நிர்மாணத்திற்கான செயற்திட்டம் மற்றும் பிராந்திய சுகாதார மையங்களை நிறுவுவதற்கான | எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வேலை தொடங்குவதில் தாமதம், ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களுக்காக குறிப்பிட்ட நேரத்தில் பணம் செலுத்தப்படாமையினால் நிர்மாண வேலைகள் தாமதமடைந்தமை போன்ற காரணங்களினாலே ஆகும். அத்துடன் நிதி அமைச்சின் 2019.09.24 ஆந் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையில் திட்டமிடப்பட்டிருந்த சில செயற்திட்டங்களில் பெறுகை நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படாமைக்கான |

| | | |
|---|---|---|
| செயற்திட்டம் என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையில் எதிர்பார்க்கப்பட்டவாறு முடிப்பதற்கு முடியாமல் காணப்பட்டன. | | அறிவுறுத்தல் வழங்கப்பட்டமையால் செயற்பாடுகளை நிறுத்த வேண்டி ஏற்பட்டமை. |

## 3.5 செயற்திட்டங்கள் முடிக்கப்படாது கைவிடப்பட்டமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அமைச்சின் கீழான நகரத் திட்டமிடல் பிரிவினால் 2019 வருடத்திற்குள் உள்ளடக்கப்பட்டதன் பிரகாரம் 16 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட இருந்த 248 செயற்திட்டங்களில் 171 செயற்திட்டங்கள் அதாவது நூற்றுக்கு 69 வீதமளவான செயற்திட்டங்கள் வட மற்றும் வட மத்திய பிரதேசங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டு இருந்தன. அம்பாறை மற்றும் நுவரெலியாக மாவட்டங்களுக்குள் 2016 இலிருந்து 2018 ஆம் வருடத்திற்குள் ஆரம்பிக்கப்பட்ட 04 செயற்திட்டங்களின் வேலை , நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதியில் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. | திட்டமிட்டவாறு செயற்திட்ட நடவடிக்கைகள் முடிக்கப்பட வேண்டியமை. | 2019 வருடத்திற்குள் செயற்திட்டத்தின் நூற்றுக்கு 70 வீதம் மட்டும் வட, வட மத்திய மற்றும் கிழக்குப் பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்படுவதற்கு 2019 பாதீட்டு முன்மொழிவுகள் ஆரம்ப காரணமாக இருந்தது. அத்துடன் 2019 ஆம் வருடத்தில் ஆகஸ்ட் வரையில் ஏனைய கட்டுநிதி வழங்கப்படாமையினால் 2018 வருடத்திற்குள் முடிக்கப்படாத செயற்திட்டங்கள் 2019 வருடத்திற்குள் முடிக்கப்படுவதற்காக மட்டுமே ஆரம்பத் தொகை ஒதுக்கப்பட்டமை, 2019 வருடத்தில் ஒதுக்கப்பட்ட மேலதிக ஒதுக்கங்களில் நூற்றுக்கு 50 வீதம் வட, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக ஒதுக்கப்படுவதற்கு காரணங்களாகும். |

## 3.6 செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) களணிப் பல்கலைக்கழகத்தில் ரூபா 250 மில்லியன் கிரயமான மதிப்பீட்டின் அடிப்படையில் செயற்படுத்தப்பட்ட மின்கற்றல் வளங்கள் மத்திய நிலையத்தை உருவாக்கும் செயற்திட்டத்திற்காக முடிக்கப்பட வேண்டிய திகதி திட்டவட்டமாக காட்டப்படாமையுடன் செயற்திட்டக்காலம் 2017/2018 வருடங்களாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் செயற்திட்டத்திற்காக ரூபா 39 மில்லியன் ஒதுக்கம் மட்டுமே உபயோகிக்கப் பட்டிருந்ததுடன் அதனோடு ஒப்பிடும் போது செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் மிகவும் குறைந்தளவில் காணப்பட்டது. இக்காலத்தை நீடித்த காரணத்தினால் செயற்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்ப வளங்கள் வழக்கற்றுப் போனமை மற்றும் விலைகளில் அதிகரிப்பு என்பன திட்டத்தினை நடாத்திச் செல்வதில் மோசமாகத் தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தை திட்டமிடும் போது சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையின் அங்கீகாரம் கருத்திற் கொள்ளப்பட்டு முடியுமானளவு திட்டவட்டமாக முடிக்கப்பட வேண்டிய குறிக்கோள்கள் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டக் காலத்திற்கான நீடிப்பு வழங்கப்படும் போது தொழில்நுட்ப வளங்களின் பயனுள்ள ஆயுட்காலம் கருத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தேவைக்கேற்ற ஒதுக்கங்கள் ஒதுக்கப்படாமை காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாத போதிலும் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் விளைவாக தற்போது பல e-தயாரிப்புக்கள் ஆய்வுத்துறையில் பயன்படுத்தப்படுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 1,180 மில்லியனான றுகுணு பல்கலைக்கழகத்தில் 12 மாடிகள் கொண்ட மருத்துவபீடம் கட்டிடம் நிர்மாணித்தல் செயற்திட்டமானது 2018 ஆரம்பக் காலாண்டிற்குள் தொடங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக 2018 சனவரி 17 ஆந் திகதி ரூபா 200 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் 2019 செப்டம்பர் 30 ஆந் திகதி வரையில் முடிக்கப்படல் வேண்டும். எனினும், மீளாய்வாண்டின் இறுதிவரையில் செயற்திட்டத்தின் நிதி முன்னேற்றம் ரூபா 299 மில்லியன் மட்டுமே என்பதுடன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 19 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் வேலை தொடங்குவதற்கான முற்பணத் தொகையை கழிப்பதற்கு போதிய அளவிலான பணிகள் முடிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரரின் முன்னைய செயற்திட்டங்கள் முடிக்கப்பட்டமைக்கான செயலாற்றுகை முன்னேற்றத்தினை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்படல் வேண்டும். | நானாவித காரணங்களின் அடிப்படையில் அக்கம்பனியின் நடவடிக்கைகள் சீர்குறைந்து இருந்ததுடன் இந்நிர்மாணம் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்ட மையால் அவ் வொப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையினை நிறுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் இந்நிர்மாணம் CECB கம்பனிக்கு கையளிக்கப்பட்டது. |
| (இ) | நீர்வழங்கல் மற்றும் நீர்வடிகாலமைப்புச் சபை மூலம் செயற்படுத்தப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 119,544 மில்லியனான 08 செயற்திட்டங்கள் ஒப்பந்தக்காரரின் மோசமான செயலாற்றுகை, நிலத்தீர்வில் தாமதங்கள், ஒப்பந்தங்களை வழங்குவதில் தாமதங்கள், சுற்றுச்சூழல் மற்றும் மீள்குடியேற்றத் | திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை முடிப்பதற்கு நம்பிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் செயற்திட்டங்கள் காலதாமதமாக்கு வதற்கான காரணங்களாகும். |

| | | | |
|---|---|---|---|
| | தாமதங்கள் போன்ற காரணங்களால் திட்டமிடப்பட்ட திகதியை விஞ்சியதாக 184 தொடக்கம் 1825 வரையான காலவீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்மை யுடன் அத்திட்டங்களை முடிப்பது சம்பந்தமாக ஒப்பந்தக்கால வரையறையை விஞ்சியதான திகதிக்கான நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ)(i) | 2017 மற்றும் 2018 வருடங்களில் நீர்வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற ரூபா 3,630.41 மில்லியன் கிரயமான 04 நகர நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மையுடன் அவற்றில் 3 திட்டங்களின் செயற்பாடுகள் 2019 ஆம் வருடத்தில், ஒரு திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 01 சனவரி 2020 திகதி வரையில் முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், 31 மே 2020 திகதி வரையில் அந்த 4 ஒப்பந்தங்களினதும் நிர்மாணக் காலமானது 150 நாட்கள் தொடக்கம் 415 நாட்கள் வரையிலான கால வீச்சில் தாமதம் ஏற்பட்டிருந்தது. | திட்டமிட்டவாறு செயற்திட்டத்தை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கொவிட்-19 தொற்று நோய் நிலைமை, அரசினால் குறிப்பிடப்பட்ட இறக்குமதிப் பொருட்களுக்கான தடைகள் காரணமாக நீர்க்குழாய் உதிரிப்பாகங்கள் போன்றவை வேலையை முடிப்பதற்காக வழங்கப்படாமை ஒப்பந்தக்காரரின் திறன் குறைவடைந்தமை, 2019 ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதல் மற்றும் நிதிப் பற்றாக்குறை என்பன சிலவற்றுக்கான காரணங்களாகும். |
| (ii) | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 608.5 மில்லியனான முலன்காவில் நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 08 அன்று | - மேற்படி -. | 2020 ஒக்தோபர் வரையில் முடிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டதுடன் அது 09 மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் பின்னர் உத்தேச நீர் ஆதாரங்களிலிருந்து தண்ணீரைப் பெறுவதற்கு பிரதேசவாசிகள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் 04 மாதங்களுக்குப் பின்னர் நீர் ஆதாரங்களை மாற்ற வேண்டியிருந்ததுடன் 2020 மே 31 ஆந் திகதி வரையில் திட்டத்தின் ஒப்பந்தக்காலம் காலாவதியாகி வருடத்திற்கும் கூடிய காலம் எடுக்கப்பட்டிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதமாக மட்டுமே காணப்பட்டது. | | |
| (iii) | மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 733.75 மில்லியன் ஆன முல்லைத்தீவு நீர் வழங்கல் செயற்திட்டம் நிர்மாணத்திற்காக 2018 ஏப்ரல் 09 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டதுடன் அது 11 மாதங்களுக்குள் அதாவது 2019 ஏப்ரல் 11 ஆந் திகதி முடிக்கப்பட வேண்டியிருந்தது. 2020 மே 31 ஆந் திகதி வரையில் ஒப்பந்தத்தின் நூற்றுக்கு 85 வீதம் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி -. | 2020 ஒக்தோபர் வரையில் முடிப்பதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. |
| (iv) | 2017 ஆம் வருடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட ஒப்பந்தப் பெறுமதி ரூபா 881.7 மில்லியன் பெறுமதியான 49 செயற்திட்டங்களில் 19 திட்டங்களுக்கு திட்டமிடப்பட்ட திகதிகள் விஞ்சப்பட்டு 83 நாட்கள் தொடக்கம் 271 நாட்கள் | - மேற்படி - | குறிப்பிட்ட காலத்திற்குள் தேவையான உபகரணங்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமை, ஒப்பந்தக்காரர்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறுதல் மற்றும் தொழிலாளர்களைத் |

| | | | |
|---|---|---|---|
| | வரையான காலவீச்சில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | | தக்க வைத்துக் கொள்வதற்கு முடியாதிருந்தமை மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புக்களின் பங்களிப்புத் தொகையான நூற்றுக்கு 30 வீதத்தை அறவிடத் தவறியமை போன்ற காரணங்களால் இவ் ஒப்பந்தங்களில் சிறுது தாமதம் ஏற்பட்டது. |
| (உ) | ஹம்பாந்தோட்டை ஆன்டரகஸ்யாய நிலத்தடித் தாங்கியிலிருந்து கண்ணொருவ வரையில் நீர்க் குழாய்களை இடுவதற்கு II ஆம் கட்டச் செயற்திட்டத்திற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெறப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 314.9 மில்லியன் ஆன ஒதுக்கங்கள் முற்றாக அச்செயற்திட்டத்திற்காக உபயோகிக்கப்படவில்லை. மேலும் 2017 மற்றும் 2018 வருடங்களில் முறையே ரூபா 70 மில்லியன் மற்றும் ரூபா 20 மில்லியன்மதிப்பீட்டு ஒதுக்கங்களின் மூலம் பெறப்பட்ட மொத்தமான ரூபா 90 மில்லியனில் ரூபா 73 மில்லியன் பயன்படுத்தப்படவில்லை. மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட ஒதக்கம் ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டு ரூபா 11.8 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் இச்செயற்திட்டம் 2017 பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 யூன் வரையில் முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் வரையில் | முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் ஒதுக்கங்கள் பெறப்பட்டு செயற்திட்டங்களை விரைவில் முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயற்திட்டத்தை தொடங்கும் போது இனங்காணப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் 23.10.2019 அன்று நிறைவடைந்துள்ளன. 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட விதிகளை இனங்கண்டுப் பிரதேசங்களில் மேலும் நீர்க் குழாய்களை விரிவுபடுத்துவதற்கும் மற்றும் நீர் இணைப்புக்களை வழங்குவதற்கும் 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த ஒதுக்கங்களைப் பயன்படுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. |

| | | |
|---|---|---|
| மேலும் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஊ) கேகாலை மாவட்டத்தில் மீள்குடியேற்ற கிராமங்களுக்கு நீர் வழங்கல் வசதிகளை வழங்கும் செயற்திட்டத்திற்காக 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களின் போது மொத்தம் 355 மில்லியன் ஆன ஒதுக்கத்தில் ரூபா 121 மில்லியன் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது இதற்காக மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 99.6 மில்லியனாகவும் குறைநிரப்பு ஒதுக்கம் ரூபா 87 மில்லியனாகவும் தேறிய ஒதுக்கம் ரூபா 186.6 மில்லியன் என்பதுடன் செலவுகள் ரூபா 51.7 மில்லியன் ஆக இருந்தது. அத்துடன் செயற்திட்டம் 2017 மார்ச் மாதம் தொடங்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் முடிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 யூன் வரையில் மேலும் காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - | ஒதுக்கங்களைப் பெறுவதற்கு தாமதமேற்பட்டமை யினால் ஒப்பந்தக்காரரின் பற்றுச் சீட்டுக்கள் தீர்க்கப்பட முடியாமையுடன் அவ் ஒப்பந்தக்காரர்களின் நிர்மாண நடவடிக்கைகள் மந்த கதியில் காணப்பட்டமையால் அதன் பிரகாரம் இச்செயற்திட்டத்தின் கீழ் 15 மீள்குடியேற்ற கிராமங்களுக்காக பெறப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் படி இவ்வருட இறுதியில் வேலை முடிக்கப்படுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.7 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சுனாமியால் இழப்புக்களைச் சந்தித்த பிரதேசங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களின் | வெளிநாட்டுக் கடன் உதவி மற்றும் மானியங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு உதவிச் | தற்போது செயற்படுத்தப்படுகின்ற 2 முடிவடைந்த மிகுதிச் செயற்பாடுகள் 3 இற்கான ஒப்பந்தங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | மறுசீரமைப்பு மற்றும் மீண்டும் நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்கான இலக்கம் 711 ஆன கடன் ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் இன்னும் மிகுதியாகக் காணப்படுகின்ற குவைட் தினார் 231,626 ஆன மிகுதிக்குரிய செயற்படுத்தப்படுகின்ற இத்திட்டத்தில் இரண்டாம் கட்டத்திற்கான பணிகள் மீளாய்வாண்டின் இறுதிவரையில் முடிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 47 ஆக குறைந்தளவு மட்டத்தில் காணப்பட்டது. | செயற்திட்டங்களை தாமதமேற்படாது ஆரம்பிப்பதுடன் செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் இலக்குகளை அடையும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2020.01.22 திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 23.5 மில்லியன் பெறுமதியான பற்றுச்சீட்டுக்கள் 2020 வருடத்திற்காக இதற்கான ஒதுக்கங்கள் வழங்கப்படாத காரணத்தினால் மீள் நிரப்பப்படாமையினால் ஒப்பந்தக்காரர் மந்த கதியில் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். |
| (ஆ) | யுனிசெப் உதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட பாலின சமத்துவம் ∴ சமத்துவம் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் கொடுமைப்படுத்தல் தடுப்பு மையம் ஒன்றை நிறுவுதல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் புதிய கொடுமைப்படுத்தல் தடுப்புத் திட்டம் தொடர்பான செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டம் 2019 பெப்ரவரி 01 ஆந் திகதியிலிருந்து யூலை 31 ஆந் திகதி வரையில் 6 மாத காலப்பகுதிக்குள் முடிக்கப்பட வேண்டியிருந்தது. ஆனால் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இரண்டாம் கட்டத்தின் பணிக்ள முடிக்கப்படாத | இச்செயற்திட்டம் காலத்தின் தேவையை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்ற திட்டமொன்று என்பதால் காலதாமதமின்றி குறிப்பிட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்ப துடன் தாமத நிலைமை செயற்திட்டத்தின் மூலம் கண்டு பிடிக்கப்பட்ட உபாயங்கள், விமானிகளைப் பரிசோதனை செய்வதற்கான தேவைப்பாடு, புதிய மாணவர்களுக்கான சமூக மதிப்புக்களை மேம்படுத்துவதற்கும் புதிய மாணவர்களுக்கு அறிமுகப் படுத்துவதற்காக ஒரு தொகுதியை உருவாக்க வேண்டியமை போன்ற காரணங்களினால் இந்த இரண்டாம் கட்டத்தின் காலம் 2019 மார்ச் 01 இலிருந்து நவம்பர் 30 ஆந் திகதி வரையில் ஒன்பது மாதங்களுக்கு (9) நீடிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தால் செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடைந்து கொள்ள முடியவில்லை. | | |
| (இ) | இலங்கை அரசின் மற்றும் சவூதி அரேபியா அரசின் உதவியின் அடிப்படையில் ரூபா 4,077 மில்லியன் செலவில் 2017 ஆம் வருடத்தில் அக்டோபர் 24 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2020 வருடத்தில் திசெம்பர் வரையில் முடிக்கப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த வயம்ப பல்கலைக்கழகத்தின் நகர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக அனுமதி பெறுதல் மற்றும் செயற்திட்டத்தின் திட்டம் தயாரிப்பதில் தாமதம் மற்றும் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் குறைபாடுகள் காரணமாக மேலும் திட்டம் மாற்றம் செய்ய வேண்டியேற்பட்டமை மற்றும் மதியுரைக் கம்பனி நிறுவுவதால் தாமதம் போன்ற காரணங்களால் இத்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் பெறுகை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வெளிநாட்டுக் கடன் உதவிகள் அல்லது மானியங்களின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வெளிநாட்டு உதவித் திட்டங்களைக் காலதாமதமின்றி ஆரம்பிக்க வேண்டியதுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட இலக்கை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இச்செயற்திட்டத்தின் கீழ் மாகந்துரை மற்றும் குளியாப்பிட்டியில் அமைந்துள்ள இரு சுற்றுச்சூழலுக்கான மதியுரையாளர் நியமிக்கப்பட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் அம்மதியுரையாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் முடிக்கப்பட்டதுடன் 2019 செப்டம்பர் / ஒக்டோபர் மாதத்திற்குள் ஏற்பட்ட பல்கலைக்கழக கல்விசார் ஊழியர்களின் வேலைப் பகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழகத்தினுள் செயற்திட்டத்தின் பணிகளை மேற்கொள்வதற்கு முடியாமை காணப்பட்டது. |
| (ஈ) | இலங்கை அரசின் மற்றும் குவைத் அரசின் உதவியினூடாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பாதுகாப்பு விஞ்ஞான துறையின் செயற்திட்டம் ரூபா 6,617.5 | உலக வங்கியின் உதவியின் கீழ் பெறப்பட்ட கடன் உதவிகளில் செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது அவை காலதாமதமின்றி | பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட தடைகள் காரணமாக நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்பட்டு நிர்மாண பணிகள் ஆரம்பிப்பதற்கு 2019 யூன் மாதம் 01 |

| | | |
|---|---|---|
| மில்லியன் ஆரம்பச் செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு 2019 யூன் 01 ஆந் திகதி வரையில் காலதாமத மேற்பட்டிருந்ததுடன் பணிகள் முடிக்கப்பட வேண்டிய திகதி 2021 மார்ச் 31 வரையில் நாட்கள் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 865.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டு செயற்திட்டத்தின் பணிகளில் ஒன்றான வாகனக் கொள்வனவுப் பணி மட்டுமே முடிக்கப்பட்டு ஏனைய செயற்திட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் நூற்றுக்கு 25 வீதமாக மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட இலக்கைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஆந் திகதி வரையில் தாமதமானது. இந்த நிர்மாணத்தின் பெறுகையின் தன்மை காரணமாக நிர்மாண காலத்திற்கு குறைந்த பட்சம் 720 நாட்களாவது தேவைப்படுகின்றதுடன் அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் செல்லுபடியாகும் காலம் 2021 மே 31 ஆந் திகதி வரையில் நீடிக்கப்பட வேண்டியிருந்தது. இருப்பினும் தற்போது இத்திட்டம் மிகவும் விரைவாகச் செயற்படுத்தப்பட்டு வருகின்ற ஒரு திட்டமாகும். |

### 3.8 செயற்திட்டம் குறிப்பிட்ட திகதியில் ஆரம்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை அரசு மற்றும் இந்திய அரசின் ஒதுக்கங்களின் கீழ் ரூபா 335.7 மில்லியன் செலவு மதிப்பீட்டின் அடிப்படையில் மட்டக்களப்பு சுனாமி விபுலானந்தா அழகியல் நிறுவனத்திற்காக கட்டிடத் தொகுதி ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் வாகனக் கொள்வனவு செய்தல் செயற்திட்டம் 2018 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் மதியுரை நிறுவனத்துடன் | செயற்திட்டம் குறிப்பிட்ட கால எல்லைக்குள் முடிக்கப்பட்டு இலக்குகளை பூர்த்தி செய்யப்பட வேண்டியமை. | 2019 ஆம் ஆண்டிற்குள் ஏற்பட்ட பல்வேறு காரணங்களினால் மதியுரைக் கம்பனியொன்றைத் தெரிவு செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது. அமைச்சினால் செய்யப்பட்ட சுயாதீனச் சோதனையின் போது பதிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல் பொருத்தமானது என உத்தேசிக்கப்பட்டு |

| | | |
|---|---|---|
| ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகள் 12 யூலை 2019 ஆந் திகதி வரையில் தாமதமாகியிருந்தது. இதனால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்ப பெறுகை கட்டங்களிலேயே காணப்பட்டது. | | இந்திய அரசும் ஒப்புக்கொண்ட பின்னர் மொத்தச் செலவு மீளாய்வு செய்யப்பட்ட போது பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டது. |

### 3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய நல்லாளுகைச் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் விதிகளுக்கு முரணாக அமைச்சிற்குச் சொந்தமான இரு வாகனங்கள் மாகாணத் தெருக்கள் அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் ஒரு வாகனம் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காகவும் விடுவிப்புச் செய்யப்பட்டிருந்தன. | மீண்டும் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது முறையாக கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | வயம்ப மாகாணப் பிரதான செயலாளரினால் விடுவிக்கப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் வாகனங்கள் வழங்கப்பட்டமை மேற்கொள்ளப்பட்ட மையுடன் அமைச்சின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்திட்டம் என்பதால் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக அமைச்சின் பாவனைக்காகப் பெறப்படாமல் KB-2442 இலக்க வாகனம் செயற்திட்டத்தின் கடமைகளுக்காகப் பெறப்பட்டிருந்தது. |
| (ஆ) கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட சுயாதீனப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டதன் படி 8 மோட்டார் கார்கள், ஒரு | ஓட்டங்களிற்குப் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு அல்லது நீக்குவதற்கோ ஆன நடவடிக்கை | 2018 ஆம் ஆண்டில் நீக்கப்படுவதற்கான செயற்பாடுகளின் கீழ் ஏலத்திற்கு விடப்பட்ட 3 வாகனங்களுக்கான விண்ணப்பங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | ஜீப் வண்டி மற்றும் முச்சக்கர வண்டி ஆகியவை ஓட்டங்களிற்குப் பயன்படுத்தப்படாமல் அமைச்சின் சூழலில் பாதுகாப்பின்றி நிறுத்தப்பட்டிருந்தன. | எடுக்கப்பட வேண்டியமை. | கிடைக்காமை காரணமாக ஏலத்திற்கு விற்க முடியாது போனமையால் இவ்வருடத்தில் நீக்கப்படுவதற்கான செயற்பாடுகளின் கீழ் பாவனைக்குட்படுத்தப் படாத வாகனங்கள் பரிசீலிக்கப்பட்டு ஏலத்தில் விடப்படுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |
| (இ) | மீளாய்வாண்டிற்குள் நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்கு உரித்தான 5 வாகனங்கள், 2 செயற்திட்டங்களுக்கு உரித்தான 4 வாகனங்கள், மற்றைய எட்டு அமைச்சுக்களுக்கு உரித்தான 12 வாகனங்கள் மற்றும் செயலக அலுவலகத்திற்கு உரித்தான 1 வாகனம் என 22 வாகனங்கள் ஆகியவை அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. | முறையான கையளிப்பதற்கு அல்லது குறிப்பிட்ட நிறுவனங்களிற்கு விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அமைச்சின் அமைச்சர் மற்றும் செயலாளர் ஓய்வூதியம் பெற்றுச் சென்றதன் பின்னர் இந்த அமைச்சிற்கு கையளிக்கப்பட்ட வாகனங்கள் உத்தியோகத்தர்கள் பாவனைக்குட்படுத்து வதற்கான புதிய வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்கான ஒதுக்கங்கள் இன்மையால் மற்றும் வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெறுவதனை விட அமைச்சின் கீழ் காணப்படுகின்ற சபைகளின் மற்றும் செயற்திட்டங்களின் வாகனங்களைப் பயன்படுத்துவது பொருளாதார ரீதியான சிறந்ததொன்றாகும். |

**3.10 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 128(1)(சி) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்கள் அந்த நேரத்தில் செல்லுபடியாகக் கூடிய சட்டம் மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பிணை பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | உடன்படுகின்றேன். |

**3.11 வேறு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தேசியப் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் உயர்கல்விப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட அலுவலக திருத்த வேலைகளுக்கான பெறுகைகள் தொடர்பாக ஏற்பட்ட அனைத்துச் செலவுகளும் உட்பட மொத்தச் செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அளவுப்த்திரப் பொருட்கள் மற்றும் தொடர்புடைய விகிதங்கள் காட்டப்பட்ட விபரமான மொத்தச் செலவு மதிப்பீடொன்று தயாரிக்கப்படவில்லை. அந்த விகிதங்கள் மற்றும் அளவுகளையும் தீர்மானிப்பதற்கு ஒப்பந்தக்காரருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மேற்கூறப்பட்ட பணி இக்கட்டிட நிர்மாண வகைக்கு உரித்தானது அல்ல என்பதுடன் மேலும் கட்டப்பட்டகட்டிடத்தின் உட்புறத்தை (interior) தயாரிப்பது ஆகும். இதற்கு நிலையான உருப்படிகள் அல்லது நிலையான Rates எதுவும் இல்லை இருப்பினும் ஒரு சுமாரான விபர மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் Brief Description, Quantity, Unit Rate, Amount குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சின் செயலாளரின் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 ஆம் வருட அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் என்பவற்றின் பிரகாரம் உயர் கல்விப் பிரிவிற்கான விடயங்கள் சிலவற்றை குறித்து அமைச்சின் கவனம் கோரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் குறிப்பிட்ட குறிக்கோள்களில் அச்சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தேச திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | நிலையான அபிவிருத்தியின் நோக்கங்களின் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அமைச்சினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | வட்டியல்லாத மாணவர்களிற்கான கடன்உத்தேசத் திட்டம் மேற்கொள்ளப்படலின் கீழ் உள்ளடக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் முன்னேற்றத்தைக் காட்டாமை, தேசிய உயர் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவகத்தின் (SLIATE) மூலம் உயர்கல்விக்கான சந்தர்ப்பங்கள் வழங்குதல், பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) கீழ் நடாத்தப்படுகின்ற தேசிய பல்கலைக் கழகங்க ளூடாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல், இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக் கழக ங்களுக்காக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் அமைச்சினால் நிறைவேற்றப்பட்டமை ஆகும். |
| (ஆ) | அமைச்சின் நிலையான அபிவிருத்திக் குறிக்கோள் ஒன்றாக சுத்தமான நீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குதலை இனங்காணப்பட்டிருந்ததுடன் அபிவிருத்திக்குள் குழாய் நீர் வழங்கலைச் செயற்படுத்தல் மற்றும் செப்டிக் சிகிச்சையை | நிலையான அபிவிருத்தி தொடர்பாக வெளியிடப்பட்ட வேண்டிய சுற்றறிக்கையினை வெளியிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இது தொடர்பான இலக்குகள், குறிகாட்டிகள் மற்றும் பொறுப்புள்ள தரப்பினர் இனங்காணப்பட்டிருப்ப துடன் 2019 ஆம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்துடன் செயற்திட்டங்கள் மற்றும் |

| | | |
|---|---|---|
| (Septage treatment) செயற்படுத்துவதையும் நோக்கங்களாகக் கொண்டிருந்தது. அத்துடன் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதாரம் ஆகியவை குறிகாட்டிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன. நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை அடைவதில் ஆர்வமுள்ள தரப்பினர் இனங்காணப்பட்டுள்ளமை யுடன் சுவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும், இது தொடர்பாக எவ்வித சுற்றறிக்கையும் இற்றை வரையில் வெளியிடப்படவில்லை. | | விழிப்புணர்வுகள் நடாத்தப்பட்டதாகவும் செயலாளரின் 2020 யூன் 22 ஆந் திகதிய மற்றும் 01/02/04(v) ஆம் இலக்க கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 04 பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப் பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போது அப்பிரிவுகள் 04 இற்குரிய வெற்றிடங்கள் 77 எழுந்துள்ளன. எனினும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது அமைச்சினால் பல சந்தர்ப்பங்களில் | பணியாளர்களின் தேவையான வெற்றிடங்களை சரியான நேரத்தில் நிரப்புவதற்கு அமைச்சின் நடவடிக்கை செயற்றிறன் மிக்கதாகவும் பயனுள்ளதாகவும் மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2020 யூன் இறுதிக்குள் 67 வெற்றிட எண்ணிக்கைகள் மட்டும் என்பதுடன் ஏனைய வெற்றிடங்கள் நிரப்புவதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | அறிவிக்கப்பட்டிருந்ததுடன் 2020 யூன் இறுதியின் போது பட்டதாரிப் பயிற்சியாளர்கள் 36 பேர் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். மீதமான வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்புச் சபைக்குரித்தான 7 பதவிகளைச் சேர்ந்த 18 ஊழியர்கள் 1 வருடம் முதல் 5 வருடங்கள், 5 மாதங்கள் வரையான காலங்களாக நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சில் பணியாற்றி வருவது அவதானிக்கப்பட்டது. இத்தகவல்களின் அடிப்படையில் பணியாற்றுகின்ற 15 ஊழியர்களுக்காக சம்பளம், படிகள், ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக சபையினால் மொத்தம் ரூபா 17.5 மில்லியன் மீளாய்வாண்டிற்குள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அத்தொகை சபைக்கு திருப்பிச் செலுத்தப்படவில்லை. | வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட மனித வளங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட வேண்டியமை. | 47 வெற்றிடங்கள் காணப்படுவதால் தேசிய நீர் வழங்கல் சபையின் 19 உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும். அமைச்சில் தற்போது காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது அவர்களை விடுவிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. |